வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஆர். சி. சாமண்ண கவுண்டர் அவர்கள் 26-1-1983 அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்றுள்ளார். மூன்றுமுறை வடாற்காடு மாவட்ட நிர்வாகக் குழுவில் (டிஸ்டிரிக்ட் போர்ட்) தலைவராக பணி ஆற்றியுள்ளார்.

அன்னாரை இழந்துவிட்ட அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் நமது இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பூமிக்கடியில் நீர் அழுத்த மின்நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண். 1—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பூமிக்கடியில் நீர் அழுத்த மின் நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற காலத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள். அது எப்போது எப்படி செயல்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது காடம்பாறை நீரேற்று மின் திட்டம். இதனுடைய முதல் யூனிட் 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இயங்கத் துவங்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆகும் திட்ட மதிப்பீடு எவ்வளவு? இதன் மூலம் எவ்வளவு மெகா வாட் மின்சாரம் உற்பத்தி ஆகும் என்பதை அறிவிக்க இயலுமா?

1983 சனவரி 27]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு 127 கோடி ரூபாய் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதலாக மின் உற்பத்தி எதுவும் கிடைக்காது. மின் உச்ச காலத்தில் நமக்கு இது பயன்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் இதற்கு முன் எப்போதும் கண்டிராதமாதிரி தற்போது மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இப்போது எங்கெங்கே மின்சாரம் தயாரிக்க முடியுமோ அங்கெல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிடுவது அவசியம்தான். தமிழகத்தில் பூமிக்கடியில் இந்த மின்சாரம் எப்படி எடுக்கப்படுகிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே அமைச்சர் அவர்கள் 10, 10 மெகாவாட் திறனுள்ள சிறுசிறு மின் உற்பத்தி நிலையங்கள் துவங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இதற்கு 130 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக இதற்கு மத்திய அரசு தடங்கலாக இருந்தாலும் மாநில அரசே இதை சய்வதற்கு வேண்டிய திட்டங்களை உருவாக்க மின்சார அமைச்சர் அவர்கள் யோசித்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் 1984 ஆம் ஆண்டு இந்த பூமிக்கடியில் நீர் அழுத்த மின் நிலையம் ஏற்படும் என்று சொன்னார்கள். இந்த ஆண்டே அப்படிப்பட்ட மின்நிலையம் ஏற்படுத்துவதற்கான தீர்மானம் ஏதேனும் உள்ளதா? தற்போதுள்ள மின் வெட்டு எப்போது தளர்த்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக்கேள்வி போடவும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே; நிலத்தடி நீரைப் பயன்படுத்த, குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் நீரைத் தோண்டியெடுத்து இருக்கிறார்கள். அது செயல்படாமல் இருந்து கொண்டு இருக்கிறது, அதைச் செயல்படுத்த நமது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி நிலத்தடி நீரில் இருந்து மின்சாரம் எடுப்பதைப் பற்றியதாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயத்திற்குத்தான் நிலத்தடி நீரை எடுத்து இருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

[1983 சனவரி 27

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 127 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். இதன் மூலம் எத்தனை மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும்? வேறு இடங்களில் இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, 100 வாட் மின்திறன் உள்ள நான்கு யூனிட்டுகள் இந்தத் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின் நோக்கம், மின்தேவை எப்போது ஏற்படுகிறதோ அப்போது இந்த அணையில் இருந்து வருகின்ற நீரைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்துகொண்டு, நள்ளிரவில் மின்தேவை திடீரென்று குறைகிறபோது, அனல் மின்நிலையத்தின்மூலம் நீரை அணைக்கு திரும்பக்கொண்டுவருவதற்கானதாகும். ஆகவே, இது மின் உச்சக் கட்டத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே தவிர, கூடுதலாக அதிகமான பலனைத் தந்து விடாது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர் அழுத்த மின் நிலையம் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தொழிற்சாலைகள் நிரம்பியுள்ள கோவை மாவட்டத்தில் அனல் மின்நிலையம் அமைக்க அரசு முன்வருமா? தனியார் அனல் மின்நிலையம் அமைக்க முன்வந்தால் அரசு ஆதரவு அளிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி நீர் அழுத்த மின் நிலையத்தைப் பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தகைய கேள்விகளை எழுப்பினால், அமைச்சர் எப்படி பதில் அளிக்க முடியும்?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குந்தா ஐந்தாம் நீர் மின் நிலையம்.

*வினா எண். 2 திரு. கே. உச்சி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குந்தா ஐந்தாம் மின் நிலைய கட்டுமானப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) அதற்கான திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) குந்தா ஐந்தாம் நீர்மின் நிலையம் ஏற்கனவேஇயங்கி வருகிறது. இம்மின் நிலையத்தில் ஒரு கூடுதல் 20 மெகாவாட் திறன் கொண்ட பிரிவு அமைக்க மத்திய அரசின்ஒப்புதல் பெறப்பட்டு ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.